**கோவில்பட்டி நகராட்சி**

**சாதாரணக் கூட்டம்**

**நிகழும் விகாரி வருடம் கார்த்திகை திங்கள் 15, நாள்.30.11.2020ம் தேதி திங்கள் கிழமை மாலை 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.**

**முன்னிலை:- திரு.ஒ.ராஜாராம்,பி.காம்.,**

**கோவில்பட்டி நகராட்சி** **தனி அலுவலர்,**

**நாள்: 30.11.2020** **கோவில்பட்டி நகராட்சி**

| மன்ற கூட்ட தேதி | வரசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| 30.11.2020 | **<u>பொருள் எண்:</u> 1**<br>அரசாணை (நிலை) எண்.273, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.**04.06.2020**ன்படி வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கான புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான,வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br>மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கடித ந.க.எண்.**401**/ஈ**1**/2020 நாள்.**10.09.2020**ன்படி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கிய நோக்கம், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களிலுள்ள பெண்களின், நலவாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகும். எனவே வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களின் புள்ளி விபரத்தில் பெண்களை குடும்பத் தலைவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த காப்பீட்டுத் திட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள வருவாய் ஈட்டுபவர்களே (Bread Winner) பயனாளிகளாக உள்ளனர். ஆனால் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு | **தீர்மானம் எண்.4169 அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது.** |

நிறுவனத்தால் பராமரிக்கப்படும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களின் வரைவு பட்டியலில், புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கு தேவையான வருவாய் ஈட்டுபவர்கள் (**Bread Winner**) மற்றும் பரிந்துரைக்கப்பட்டவர்கள் (**Nominee**) பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவில்லை. எனவே, தற்போது இந்த விபரங்களை கூடுதலாக சேகரித்து, சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. ஊரகப் பகுதியில் மக்கள் நிலை ஆய்வு பட்டியல் (**PIP List**) மற்றும் நகர்ப்புற பகுதியில் வறுமைக்கோட்டிற்கு (**BPL**) கீழ் உள்ள குடும்பங்களின் புள்ளி விவரங்களை சரிபார்த்து புதுப்பிக்கப்பட வேண்டும்.

வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் வருவாய் ஈட்டுபவரின் பெயர், தந்தை/கணவர் பெயர் (திருமணமான பெண்கள்), பாலினம், பிறந்த தேதி, இனம், வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியல் எண் (கட்டாயம்), ஆதார் எண்.(கட்டாயம்), குடும்ப அட்டை எண் (கட்டாயம்), **IFSC Code,** வங்கிக் கணக்கு எண், வருவாய் ஈட்டுபவரின் தொழில், முழு அஞ்சல் முகவரி (வீட்டு எண், தெரு பெயர், கிராமம், தாலுகா, மாவட்டம் மற்றும் குறியீடு எண்), அலைபேசி எண், பரிந்துரைக்கப்பட்டவர்களின் பெயர், உறவுமுறை, பரிந்துரைக்கப்பட்டவரின் ஆதார் எண், முகவரி UFC விபரங்கள், வங்கி, வங்கிக்கிளை, IFSC Code மற்றும் வங்கி எண் போன்ற வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் புள்ளி விபர கணக்கில் ஏற்கனவே உள்ள விபரங்கள் காப்பீட்டு திட்ட சேர்ப்பு படிவத்தில் (Pre Populated) அச்சிடப்பட்டு வீட்டுக்கு வீடு நேரடியாக சென்று கணக்கெடுப்பு மூலம் தேவையான கூடுதல் விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

இனி வரும் காலங்களில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள தகுதியான குடும்பங்கள் ஏதேனும் **விடுபட்டிருப்பின்** அவ்வப்போது அவர்களின் மனுக்களையும் பெற்று உரியவாறு கள ஆய்வு செய்து அவர்களையும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியலில் சேர்க்கவும், காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் கூடுதல் விபரங்கள் சேகரிப்பதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.**15/-**

வீதம் ( ரூபாய் பதினைந்து) செலவு என்ற அடிப்படையில் (இதில் படிவம் அச்சிடுதல் (PrePopulated Form) ரூ.5/- தகவல் சேகரிப்பு பணி ரூ.5/- தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் ரூ.5/-) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே கணக்கெடுக்கும் பணிகளுக்காக வீடு வீடாக நேரடியாக சென்று கூடுதல் விவரங்களை சேகரிப்பதற்கு இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தில் பணிபுரியும் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் மகளிர் குழுக்களிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள டெங்கு மஸ்தூர்கள் ஆகியோரை களப்பணியாளர்களாக பணிபுரிய உத்தரவு பிறப்பிக்கவும், உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று இணையதளத்தில் அச்சடித்த புள்ளி விபரப்படிவங்களை (Pre Populated) பதிவிறக்கம் செய்து அச்சிடுவதற்கும், மேற்படி களப்பணியாளர்களால் வீடு வீடாகச்சென்று கணக்கெடுப்பு செய்து முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் கூடுதல் விவரங்களை இணையதளம் வாயிலாக (www.tipps.in) பதிவேற்றம் செய்யும் பணிக்கு உள்ளூர் கணினி மையங்களிலிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ளவும், இணையதளத்தில் ஏற்கனவே முன் உருவாக்கப்பட்ட படிவம் (Pre Populated) 16,320 வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்கள் பதிவிறக்கம் செய்து அச்சிட்டு, விவர சரிபார்ப்பு, கூடுதல் விவரங்கள் சேகரித்தல் மற்றும் சரிபார்க்கப்பட்ட புள்ளி விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் ஆகிய பணிகளுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.15/- வீதம் செலவு என்ற அடிப்படையில் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி உத்தேச செலவினத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி கணக்கெடுப்பு பணிகளுக்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், அரசால் மேற்படி கணக்கெடுப்பு பணிகளுக்கு நிதி வழங்கும் பட்சத்தில் அதனை ஈடு செய்து கொள்வதற்கும், மேற்படி கணக்கெடுப்பு பணி மற்றும் செலவினங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு::- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4078/2019/எச்1

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்: 2**<br>**கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தினால் சேதமடைந்த சாலைகளை கீழ்க்கண்ட விபரப்படி உள்ள தெருக்களில் உள்ள சாலைகள் அமைக்கும் பணிகளை சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020-2021 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மதிப்பீடு தயார் செய்து திட்டப்பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.** | **தீர்மானம் எண்.4170 அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது.** |

| வ. எண். | வேலையின் பெயர் | நீளம் (மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு தொகை (ரூ) இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.6 மற்றும் 11ல் உள்ள குசைன் மெயின்தெரு, குசைன் குறுக்குத்தெரு, காமராஜர்தெரு, காமராஜர் 1வது, 2வது மற்றும் 3வது குறுக்குத்தெரு, நேருதெரு, காசிராஜன்தெரு, பங்களா 6வதுதெரு, பங்களா 2வதுதெரு, பங்களா 2வது குறுக்குத் தெரு-1,2,3,4 பங்களா 2வது குறுக்குத்தெரு, வேலாயுதபுரம் 5வது குறுக்கு மெயின்தெரு, வேலாயுதபுரம் 5வது குறுக்கு-1,2,3வது தெரு, வேலாயுதபுரம் 1வதுதெரு வடக்கு பக்கம், வேலாயுதபுரம் 2வதுதெரு, வடக்கு பக்கம், வேலாயுதபுரம் 2வது மற்றும் 3வது குறுக்குத்தெரு மற்றும் வேலாயுதபுரம் பள்ளிதெரு ஆகிய தெருக்களில் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | 2400.00 | 3.85 | 184.00 |
| 2 | வார்டு எண்.8ல் உள்ள சிவாஜிநகர் 1வது, 2வது குறுக்குத்தெரு, சிவாஜிநகர் 3வதுதெரு, தெற்கு புதுக்கிராமம் 2வது குறுக்குத்தெரு, நாராயணகுரு தெரு, ஜெயலலிதாநகர் மெயின்தெரு, ஜெயலலிதாநகர் 1,2,3,4 மற்றும் 5வது குறுக்குத்தெரு, ஜெயலலிதாநகர் பின்பக்கதெரு, ஜெயலலிதாநகர் குறுக்குத்தெரு, வசந்தநகர் 1வது குறுக்குத்தெரு, வசந்தநகர் 1வது குறுக்கு 2வதுதெரு, கிழக்கு ஓடைதெரு, இல்லத்தார் நகர் மெயின்தெரு, இல்லத்தார் 1வது, 2வது, 3வது மற்றும் 4வது குறுக்குத்தெரு ஆகிய தெருக்களில் கான்கிரீட் பேவர் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | 2340.00 | 4.00 | 195.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | வார்டு எண்.4, 12 மற்றும் 14ல் உள்ள காம்பவுண்ட் மில் குறுக்குத்தெரு–1,2,3 மற்றும் 4வதுதெரு, காளியப்பர் குறுக்குத்தெரு, காளியப்பர் காம்பவுண்ட், சுகாதார அலுவலக சாலை, சரமாரியம்மன்கோவில் வடக்கு குறுக்குத்தெரு, முத்தையம்மாள் குறுக்குத்தெரு-1வது மற்றும் 2வதுதெரு, ஆழ்வார்தெரு, ஆழ்வார் குறுக்குத்தெரு-1,2 மில்தெரு சந்து--1,2 மற்றும் முத்தையம்மாள் மெயின்தெரு ஆகிய தெருக்களில் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | 1730.00 | 3.75 | 140.00 |
| 4. | வார்டு எண்.7ல் உள்ள பெரியசாமிநகர் குறுக்குத்தெரு, வடக்கு புதுக்கிராமம் 3வதுதெரு, 3வதுகுறுக்குத் தெரு–1,2,3,4,5 வடக்கு புதுக்கிராமம் 4வதுதெரு, வடக்கு புதுக்கிராமம் 4வது குறுக்குத்தெரு–1,2,3,4,5 வடக்கு புதுக்கிராமம் 5வது குறுக்குத்தெரு ஆகிய தெருக்களில் கான்கிரீட் பேவர்பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி.. | 2540.00 | 3.60 | 218.00 |
| 5. | வார்டு எண்.4,5 மற்றும் 6ல் உள்ள சங்கரலிங்கபுரம் மேற்கு 5வதுதெரு, 6வதுதெரு, 7வதுதெரு, 8வதுதெரு, 9வதுதெரு, 9வது குறுக்குத்தெரு, சங்கரலிங்கபுரம் கிழக்கு 1,2,3,4வதுதெரு, வேலாயுதபுரம் 6வதுதெரு, சரமாரியம்மன்கோவில் மெயின்தெரு, சரமாரியம்மன்கோவில் 1,2,3 மற்றும் 4வதுதெரு ஆகிய தெருக்களில் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி | 3235.00 | 4.20 | 257.00 |
| 6. | வார்டு எண்.16 மற்றும் 17ல் உள்ள கடலைக்காரதெரு 1வது, 2வது, 3வது, 4வது, 5வது, 6வது குறுக்குத்தெரு, செக்கடி 1வது, 2வது, 3வது, 4வது குறுக்குத்தெரு, பத்திரகாளியம்மன்கோவில் தெரு, பத்திரகாளியம்மன்கோவில் குறுக்குத்தெரு, ரோட்டரிதெரு, தங்கம்மன்கோவில் 1வது, 2வது, 3வது குறுக்குத்தெரு, ஊரணி 1வது, 2வது 3வது குறுக்குத்தெரு மற்றும் அம்பேத்கார் தெரு ஆகிய தெருக்களில் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | 2510.00 | 3.40 | 173.00 |
| 7. | வார்டு எண்.7,8,9 மற்றும் 10ல் உள்ள வள்ளுவர்நகர் 4வதுதெரு, வள்ளுவர்நகர் 4வது குறுக்குத்தெரு–1,2 வள்ளுவர்நகர் 3வதுதெரு, கருப்பசாமி ஆஸ்பத்திரி தெரு, பரமசிவம் தீப்பெட்டி தொழிற்சாலை சாலை, குறுக்கு சாலை, கடலையூர் சாலை 6வதுதெரு, காரகுறிச்சி அருணாசலம்தெரு, வள்ளுவர்நகர் காளவாசல் இறக்கம் கிழக்குதெரு, வள்ளுவர்நகர் 4-வதில் இருந்து 2வது குறுக்குத்தெரு, நாராயண குருதெரு இறக்கம், வள்ளுவர்நகர் 3வது குறுக்குதெரு–1, தேவர் படிப்பகம் இறக்கம், சிவாஜிநகர் 1வது தெரு, எம்.ஜி.ஆர் நகர் குறுக்குத்தெரு, எம்.ஜி.ஆர் நகர் குறுக்குத்தெரு–1,2,3,4,5 மற்றும் 6வதுதெரு ஆகிய தெருக்களில் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | 2995.00 | 3.90 | 226.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| **8.** | வார்டு எண்.2 மற்றும் 3ல் உள்ள நடராஜபுரம் மகராஜாகோவில்தெரு, பசும்பொன்நகர் தெற்கு மெயின்தெரு, பசும்பொன்நகர் தெற்கு 1வது, 2வது, 3வது குறுக்குத்தெரு, பசும்பொன்நகர் மெயின்தெரு சந்து, நடராஜபுரம் மேற்கு 9வது தெரு கடைசி, நடராஜபுரம் மேற்கு 9வதுதெரு, 1வது , 2வது, 3வது, 4வது குறுக்குத்தெரு, 1 முதல் 2வது குறுக்குத்தெரு, 3 முதல் 2வது குறுக்குத்தெரு பசும்பொன்நகர் 1வது, 2வது, மற்றும் 3வது குறுக்குத்தெரு ஆகிய தெருக்களில் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | **2155.00** | **4.15** | **176.00** |
| **9.** | வார்டு எண்.30,31,32,33,34 மற்றும் 35ல் உள்ள திருமங்கைநகர் 1வது தெரு, திருமங்கைநகர் 1வது குறுக்குத்தெரு (பார்க் அருகில்), திருமங்கைநகர் 2வதுதெரு, திருப்பதிகாலனி 1வது மற்றும் 2வதுதெரு, திருப்பதிகாலனி 2வது குறுக்குத்தெரு, சாஸ்திரிநகர் (பாரதிநகர் பள்ளி பின்புறம்), சாஸ்திரிநகர் (கவுணியன் பள்ளி அருகில்), ஜோதிநகர் 1வது மற்றும் 2வது தெரு (கழிப்பறை எதிர்புறம்) ஜோதிநகர் முதல் கருணாநிதிநகர் இணைப்புச்சாலை, ஜோதிநகர் முதல் கருணாநிதிநகர் 1வது குறுக்குத்தெரு, ஜோதிநகர் மெயின் சாலையில் உள்ள 1வது, 2வது, 3வது மற்றும் 4வது குறுக்குத்தெரு, ஜோதிநகர் காமராஜர் அவென்யூதெரு, எவரெஸ்ட் பள்ளி சாலை, ஜோதிநகர் மேற்கு குறுக்குத்தெரு ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | **3420.00** | **5.50** | **235.00** |
| **10.** | வார்டு எண்.20,22,23,24,26,29 மற்றும் 30ல் உள்ள உழவர் சந்தைதெரு (சரஸ்வதி மஹால் அருகில்), தட்சிணா மூர்த்தி கோவில்தெரு, சீனிவாச அக்ரஹாரதெரு (விவேகம் டிராவல்ஸ் அருகில்), மாதாங்கோவில்தெரு முதல் ஊரணிதெரு இணைப்புச்சாலை, பாரதிநகர் மேட்டுத்தெரு தெற்கு பக்க மெயின்சாலை, பாரதிநகர் மேட்டுத்தெரு தெற்கு பக்கம் 1வது மற்றும் 2வது தெரு, மகாகவிநகர், தென்றல்நகர், வீரவாஞ்சிநகர் வடக்கு குறுக்குத்தெரு-1,2,3,4,5,6,7,8,9,10 கிருஷ்ணன்கோவில் சாலை மற்றும் பின்புற சாலையில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | **2250.00** | **5.00** | **150.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| **11.** | வார்டு எண்.21,24,25,26 மற்றும் 28ல் உள்ள வீரவாஞ்சிநகர் மேற்கு 1வது மற்றும் 2வது குறுக்குத்தெரு, கதிரேசன்கோவில் மெயின் சாலையில் உள்ள குறுக்குத்தெரு (புளூஸ்டார் கம்பெனி அருகில்), ஜமீன்பேட்டை 1வது மற்றும் 2வதுதெரு, உழவர் சந்தை சாலை (தங்கமயில் நகைக்கடை அருகில்), சீனிவாச அக்ரஹாரதெரு முதல் இரயில்வே கேட், கன்னிவிநயகர்கோவில் தெரு, பார்க் கிழக்கு சாலை 1வது மற்றும் 2வது குறுக்குத்தெரு, பார்க் மேற்கு சாலை 1வது குறுக்குத் தெரு ஆகிய தெருக்களில் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | **2040.00** | **4.00** | **146.00** |
| | **மொத்தம்.** | **27615.00** | **-** | **2100.00** |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு::- மன்றம் **இப்பணியை சிறப்பு சாலைகள் திட்டம்** (SRP) **2020-2021 ன் கீழ் செய்ய** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.**5035 /2020/**இ1 | |
| | **பொருள் எண்: 3**<br>**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.** TN96B5157, TN96B5217, TN96B5167, TN96B5193, TN96B5259**ல் ஒரு வாகனத்திற்கு நான்கு டயர்கள் வீதம் 5 வாகனம் டயர்கள் பழுதாகிவிட்டதால் புதிய டயர்கள் சப்ளை செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும் இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/-க்கும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.**<br>அலுவலக குறிப்பு::- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **5123/2020/எச்1** | **தீர்மானம் எண்.4171 அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 4</u><br>இந்நகராட்சி பகுதிகளில் 36 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பறை வளாகங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், பேருந்து நிலைய பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பறை வளாகங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், நுண் உரமாக்கும் மையங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், கிருமிநாசினி பினாயில் 2019–2020ம் ஆண்டு பயன்பாட்டிற்காக 6000 லிட்டர் தேவைப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று தேவைக்கேற்ப அவ்வப்போது கொள்முதல் செய்வதற்கும் மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **4468/2015/எச்1** | தீர்மானம் எண்.4172 அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: 5</u><br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2571/2017/ஜே-1 நாள்: 28.11.2017, இயக்குநர் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.R.No.2227/VCII/S2/2016 நாள்:28.03.2017, நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20751/ஜே1/2019 நாள்:17.09.2019 மற்றும் ந.க.எண்.23001/ஜே1/2019 நாள்: 03.10.2019, துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் கோவில்பட்டி அவர்களின் கடித ந.க.எண்.792/அ3/2019 நாள்:01.10.2019 மற்றும் ந.க.எண்.00094/அ3/2020-1 நாள்:16.05.2020ல் அறிவுறுத்தியுள்ளபடி, இந்நகராட்சிப் பகுதிகளில் மழைக்காலங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டும், வீடு, வீடாகச் சென்று டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள 100 களப்பணியாளர்களுக்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்குத் தேவைப்படுவதாலும், மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களான | தீர்மானம் எண்.4173 அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பேருந்து நிலையப்பகுதிகள் மற்றும் நகராட்சி தினசரி சந்தைப் பகுதிகள், கிருஷ்ணன்கோவில் வணிக வளாகப் பகுதிகள், தெற்கு பஜார், கோவில் பகுதிகள் ஆகியவற்றை எப்போதும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கும் பொருட்டும், அவ்வப்போது நடைபெறும் பொதுமக்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களை சுகாதாரமாகப் பராமரிக்கும் பொருட்டும், மேற்குறிப்பிட்ட இடங்களில் தெளிப்பதற்காகவும், கிருமிநாசினி பிளீச்சிங் பவுடரை மூன்றுமாத தேவைக்கான இருப்பை எப்பொழுதும் இருப்பில் வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளபடியும், 2020-2021ம் ஆண்டு பயன்பாட்டிற்காக கூடுதல் தேவைக்காக கிருமிநாசினி பிளீச்சிங் பவுடர் 15 டன் தேவைப்படுகிறது. பருவகால மாற்றத்திற்கு ஏற்பவும், பொதுசுகாதாரப்பணி தேவைக்கேற்பவும் அவ்வப்போது வாங்கிக்கொள்வதற்கும், இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.9.50இலட்சத்திற்கும் மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1840/2020/எச்1 | |
| | **பொருள் எண்: 6**<br>கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி தரைதள கடை எண்.4 ற்கு 09.11.2020 தேதியில் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி தரைதளம் கடை எண்.4 ற்கு மாத வாடகையாக ரூ.21000/-க்கு திரு.K.கணேசன் கோரியுள்ளார். மேற்காணும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி தரைதளம் கடை எண்.4ஐ 01.12.2020 முதல் 30.11.2023 வரை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு::- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 9856/2014/அ3 | தீர்மானம் எண்.4174<br>அலுவலக குறிப்பு:<br>அனுமதிக் கப்பட்டது. |

**<u>பொருள் எண்: 7</u>**

இந்நகராட்சிப் பகுதிகளில் மழைக்காலங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டும், வீடு வீடாகச் சென்று டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள 100 களப்பணியாளர்களுக்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்குத் தேவைப்படுவதாலும், இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களான பேருந்து நிலையப்பகுதிகள் மற்றும்

நகராட்சி தினசரி சந்தைப் பகுதிகள், கிருஷ்ணன்கோவில் வணிக வளாகப்பகுதிகள், தெற்கு பஜார், கோவில் பகுதிகள் ஆகியவற்றை எப்போதும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கும் பொருட்டும், அவ்வப்போது நடைபெறும் பொதுமக்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களை சுகாதாரமாகப் பராமரிக்கும் பொருட்டும், மேற்குறிப்பிட்ட இடங்களில் தெளிப்பதற்காக தேவையான கிருமிநாசினி பிளீச்சிங் பவுடர் 2020–2021ம் ஆண்டிற்கு தேவையான 15 டன் சப்ளை செய்வதற்கு பருவகால மாற்றம் மற்றும் தேவைக்கேற்பவும் அவ்வப்போது வேலை உத்தரவின்படி சப்ளை செய்ய 10.11.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி மாவட்ட கிளினீங் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 28D முத்தானந்தபுரம் முதல்தெரு, கோவில்பட்டி. | 1 கிலோக்கு Rs.53 + Extra GST 18% |
| 2. | சிதம்பரனார் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 18A/23A, பாளையங்கோட்டைரோடு, தூத்துக்குடி. | 1 கிலோக்கு Rs.55 + Extra GST 18% |
| 3. | திருநெல்வேலி மாவட்டம் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 37, சங்கரன்கோவில்ரோடு, திருநெல்வேலி -- 627 006. | 1 கிலோக்கு Rs.56 + Extra GST 18% |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த தூத்துக்குடி மாவட்ட கிளினீங் பொருட்கள்

**தீர்மானம் எண்.4175**

**அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது.**

<table>
<tr><td></td><td>உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 28D, முத்தானந்தபுரம் முதல்தெரு, கோவில்பட்டி விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> ::-<br>(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த தூத்துக்குடி மாவட்ட கிளினீங் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், 28D, முத்தானந்தபுரம் முதல்தெரு, கோவில்பட்டி விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 1840/2020/எச்1</td><td></td></tr>
<tr><td></td><td><u>பொருள் எண்: 8</u><br>இந்நகராட்சிப் பகுதிகளில் 36 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பறை வளாகங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், பேருந்து நிலைய பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பறை வளாகங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், நுண்உரமாக்கும் மையங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், கிருமிநாசினி பினாயில் வாங்குவதற்கு 10.11.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><td>வ. எண்.</td><td>பெயர் மற்றும் முகவரி</td><td></td></tr>
<tr><td>1.</td><td>தூத்துக்குடி மாவட்ட கிளினீங் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 28D முத்தானந்தபுரம் முதல்தெரு, கோவில்பட்டி.</td><td>1 கிலோக்கு<br>Rs.52 + Extra GST 18%</td></tr>
<tr><td>2.</td><td>சிதம்பரனார் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்.,<br>18A/23A, பாளையங்கோட்டைரோடு, தூத்துக்குடி.</td><td>1 கிலோக்கு<br>Rs.54 + Extra GST 18%</td></tr>
<tr><td>3.</td><td>திருநெல்வேலி மாவட்டம் ஒப்பந்த பணியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 37, சங்கரன்கோவில்ரோடு, திருநெல்வேலி -- 627 006.</td><td>1 கிலோக்கு<br>Rs.55 + Extra GST 18%</td></tr>
</table></td><td>தீர்மானம் எண்.4176 அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த தூத்துக்குடி மாவட்ட கிளினீங் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 28**D, **முத்தானந்தபுரம் முதல்தெரு, கோவில்பட்டி விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.**<br>அலுவலக குறிப்பு ::-<br>(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த தூத்துக்குடி மாவட்ட கிளினீங் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், 28D, முத்தானந்தபுரம் முதல்தெரு, கோவில்பட்டி விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். **1840/2020/எச்1** | |
| | **பொருள் எண்: 9**<br>**கோவில்பட்டி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு** (ODF+) **தொடர்ந்து அத்தகைய நிலை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலை** (ODF+) **சான்று பெறுவதற்கும்**, GFC STAR RATING **பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இந்நகராட்சியில் தினசரி நாளிதழில் 04.11.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. பொது மக்களிடமிருந்து இதுவரை எந்தஒரு ஆட்சேபணையும் இந்நகராட்சியால் பெறப்படவில்லை.**<br>**எனவே, கோவில்பட்டி நகராட்சியில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத** (ODF+) **நகராட்சியாகவும்**, GFC STAR RATING **பெறுவதற்கும் தொடர் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>அலுவலக குறிப்பு::- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். **2162/2017/எச்1)** | **தீர்மானம் எண்.4177**<br>அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 10</u><br>கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் மேற்கு பகுதியில் உள்ள கட்டண கழிப்பறை உபயோகிக்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 30.11.2020ம் தேதியில் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் மேற்கு பகுதியில் உள்ள கட்டண கழிப்பறை உபயோகிக்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு முதலாம் ஆண்டு குத்தகை தொகையாக ரூ.8,21,000/-க்கு திரு.ந.இளங்கோவன் என்பவர் கோரியுள்ளார். மேற்காணும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் மேற்கு பகுதியில் உள்ள கட்டண கழிப்பறை உபயோகிக்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 01.12.2020 முதல் 30.11.2023 வரை ஆண்டு குத்தகையாக ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>::- மன்1றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 9856/2014/அ3 | தீர்மானம் எண்.4178<br>அலுவலக குறிப்பு:<br>அனுமதிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: 11</u><br>கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி முதல்தளம் கடை எண்.19ற்கு 30.11.2020ம் தேதியில் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி முதல்தளம் கடை எண்.19ற்கு மாத வாடகையாக ரூ.5700/-க்கு திரு.U.ராமச்சந்திரன் என்பவர் கோரியுள்ளார். மேற்காணும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி முதல்தளம் கடை எண்.19ஐ 01.12.2020 முதல் 30.11.2023 வரை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>::- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.9856/2014/அ3 | தீர்மானம் எண்.4179<br>அலுவலக குறிப்பு:<br>அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | <u>**பொருள் எண்: 12**</u><br>**இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 18 வரையிலான வார்டுகளில் குடிநீர் விநியோகத்தின்போது ஏற்படும் பகிர்மான குழாய் உடைப்புகள், பிரதான குழாய் உடைப்புகள் சரிசெய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் அடிப்படையில் பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.15.00/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br><u>அலுவலக குறிப்பு</u>::-<br>மன்றம் **இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்ய** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **4582/2020/இ1** | **தீர்மானம் எண்.4180 அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது** |
| | <u>**பொருள் எண்: 13**</u><br>**இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 முதல் 36 வார்டுகளில் குடிநீர் விநியோகத்தின்போது ஏற்படும் பகிர்மான குழாய் உடைப்புகள், பிரதான குழாய் உடைப்புகள் சரிசெய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் அடிப்படையில் பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br><u>அலுவலக குறிப்பு</u>::-<br>மன்றம் **இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்ய** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **4582/2020/இ1** | **தீர்மானம் எண்.4181 அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது** |
| | <u>**பொருள் எண்: 14**</u><br>**இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள குடிநீர் விநியோக லாரி வாகனம்** TN69Y8077**ற்கான தகுதிச்சான்று முடிவடைவதால் புதிய தகுதிச்சான்று பெறும் பொருட்டு வாகனத்தின் பழுது பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.94,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br><u>அலுவலக குறிப்பு</u> :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **4998/2020/இ1** | **தீர்மானம் எண்.4182 அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது** |

**பொருள் எண்: 15**

தீர்மானம் எண்.4183
அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் ஒரு வாகனத்திற்கு நான்கு டயர்கள் வீதம் 5 வாகனம் டயர்கள் பழுதாகிவிட்டதால் புதிய டயர்கள் சப்ளை செய்வதற்கு 06.11.2020ம் தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

| வ. எண் | வாகனம் எண் | ஆறுமுகம் டயர்ஸ், 9/7/7(2), 9/7/4(3),பஸ் ஸ்டாண்டு, சூரங்குடி - 627 859. | அபிராமி டயர்ஸ், 849/6, 849/7, தக்ஷணாபுரம் நாடார் சங்கம் பில்டிங், கோவில்பட்டி-628 501. |
|---|---|---|---|
| 1. | | விலைப்புள்ளி (ஒன்றின் விலை +GST) | |
| | TN96B5157 | 2650+GST 18% | 2600+GST 18% |
| | TN96B5217 | 2750+GST 18% | 2600+GST 18% |
| | TN96B5167 | 2650+GST 18% | 2600+GST 18% |
| | TN96B5193 | 2750+GST 18% | 2600+GST 18% |
| | TN96B5259 | 2750+GST 18% | 2600+GST 18% |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி குறிப்பிட்டுள்ள அபிராமி டயர்ஸ், க.எண்.849/6, 849/7, தக்ஷணாபுரம் நாடார் சங்கம் பில்டிங், கோவில்பட்டி--628501. விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

(அ) கொரோனா (கோவிட்-19) வைரஸ் பரவல் தடுக்கும் பணியின் அவசர, அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி குறிப்பிட்டுள்ள அபிராமி டயர்ஸ், க.எண்.849/6, 849/7, தக்ஷணாபுரம் நாடார் சங்கம் பில்டிங், கோவில்பட்டி-628501. விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.5123/2020/எச்1

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 16</u><br>கோவில்பட்டிநகராட்சியில் புதியதாக குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்காக 10 நபர்களை ஒரு வருட காலத்திற்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.21.00/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.5420/2020/இ1 | தீர்மானம் எண்.4184<br>அலுவலக குறிப்பு:<br>அனுமதிக் கப்பட்டது |
| | <u>பொருள் எண்: 17</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்கள் முறையே TN96B5193, TN96B5259, TN96B5277, TN96B5143, TN96B5217, TN96B5157, TN96B5276, TN96B5180 மற்றும் TN96B5167 ஆகிய வாகனங்களில் கிளட்ச் பிளேட் மற்றும் பழுதுகளை சரிசெய்ய உள்ளூர் விலைப்புள்ளி பெறுவதற்கும் இதற்கான செலவினத்தொகை ரூ.90,000/-க்கும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 5463/2020/எச்1) | தீர்மானம் எண்.4185<br>அலுவலக குறிப்பு:<br>அனுமதிக் கப்பட்டது |
| | <u>பொருள் எண்: 18</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்கள் முறையே TN96B5193, TN96B5259, TN96B5277, TN96B5143, TN96B5217, TN96B5157, TN96B5276, TN96B5180 மற்றும் TN96B5167 ஆகிய 9 வாகனங்களில் பட்டைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் ஒவ்வொரு வாகனத்திற்கும் கூடுதலாக 10 பட்டைகள் பொருத்துவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும் இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1,60,000/-க்கும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 5464/2020/எச்1) | தீர்மானம் எண்.4186<br>அலுவலக குறிப்பு:<br>அனுமதிக் கப்பட்டது |

**பொருள் எண்: 19**

**கோவில்பட்டி நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் ஆய்வு குறித்து முதலமைச்சர் வருகையையொட்டி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும், திட்டப்பணிகள் குறித்து நாளிதழ்களில் வெளியிட்டதற்கு பட்டியல் தொகை** Kal Publication (P) Ltd., 12,600/- **மற்றும்** Kal Publication (P) Ltd., **ரூ.**11,818/-**மற்றும்** The Daily Thanthi **ரூ.**23,688/- **மற்றும்** Malai Murasu **ரூ.**13,650/- **மற்றும்** Express Publications (Madurai) Private Limited **ரூ.20,916/-மற்றும்** Kalpublication (P) Ltd., **ரூ.**12,663/- Malai Malar **ரூ.16,800/-யை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு :-** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.4435/2019/இ1**

**தீர்மானம் எண்.4187**
**அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது**

**பொருள் எண்: 20**

**இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்கள் முறையே** TN96B5193, TN96B5259, TN96B5277, TN96B5143, TN96B5217, TN96B5157, TN96B5276, TN96B5180 **மற்றும்** TN96B5167 **ஆகிய வாகனங்களில் கிளட்ச் பிளேட் மற்றும் பழுதுகளை சரிசெய்ய 30.11.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.**

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை ஒன்றின் விலை + GST |
|---|---|---|
| 1. | ஆர்.கே.வி. மோட்டார்ஸ்<br>டாட்டா மோட்டார்ஸ் ஆத்தரைஸ்டு<br>சர்வீஸ் ஸ்டேசன்,<br>கோவில்பட்டி. | ரூ.8967 /- |
| 2. | செந்தில் ஆண்டவர் ஆட்டோ பொமைல்ஸ்,<br>கோவில்பட்டி. | ரூ.11610 /- |

**வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த ஆர்.கே.வி.மோட்டார்ஸ், டாட்டா மோட்டார்ஸ் ஆத்தரைஸ்டு சர்வீஸ் ஸ்டேசன், கோவில்பட்டி விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு ::-

(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி ஆர்.கே.வி.மோட்டார்ஸ், டாட்டா மோட்டார்ஸ் ஆத்தரைஸ்டு சர்வீஸ் ஸ்டேசன், கோவில்பட்டி விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். **5463/2020/எச்1**

**தீர்மானம் எண்.4188**
**அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது**

<table>
<tr>
<td></td>
<td>

**பொருள் எண்: 21**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனங்கள் முறையே TN96B5193, TN96B5259, TN96B5277, TN96B5143, TN96B5217, TN96B5157, TN96B5276, TN96B5180 மற்றும் TN96B5167 ஆகிய 9 வாகனங்களில் பட்டைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் ஒவ்வொரு வாகனத்திற்கும் கூடுதலாக 10 பட்டைகள் பொருத்துவதற்கு 30.11.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை ஒன்றின் விலை + GST |
|---|---|---|
| 1. | அமர் ஆட்டோ ஸ்டோர், 535/A, திருநெல்வேலி சர்வீஸ் ரோடு, கோவில்பட்டி. | ரூ.16556/- |
| 2. | கற்பகம் மோட்டார்ஸ் ஸ்பிரிங் ஒர்க்ஸ், கோவில்பட்டி. | ரூ.19665/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த அமர் ஆட்டோ ஸ்டோர், 535/A, திருநெல்வேலி சர்வீஸ் ரோடு, கோவில்பட்டி விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு ::-

(அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அமர் ஆட்டோ ஸ்டோர், 535/A, திருநெல்வேலி சர்வீஸ் ரோடு, கோவில்பட்டி விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 5464/2020/எச்1

</td>
<td>தீர்மானம் எண்.4189<br>அலுவலக குறிப்பு:<br>அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>

**பொருள் எண்: 22**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை கையாளுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.K.Dis.No.17304/P3/2018, நாள்.06.08.2018ல் வழங்கப்பட்ட அனுமதியின்படி மின்னனு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் (ந.க.எண்.2520/2018/எச்1 நாள்:26.09.2018) அவர்லேண்ட் இன்ஞ்ஜினியரிங் பி.லிட்., சென்னை நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மான எண்.3337 நாள்.16.11.2018 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.3521 நாள்.28.01.2019ல் அனுமதி பெறப்பட்டு (03.12.2018 முதல் 02.12.2019) வரையிலான காலம் முதல் திடக்கழிவு மேலாண்மை பணிகள் சிறப்பாக

</td>
<td>தீர்மானம் எண்.4190<br>அலுவலக குறிப்பு:<br>அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்பொழுது இந்நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் **02.12.2020** ல் முடிவடையவுள்ளது. இந்நகராட்சி **36** வார்டு பகுதிகள் நகராட்சி தூய்மைப்பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் பரவலாக்கப்பட்ட நுண் உரமாக்கும் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள **5** நுண் உரமாக்கும் மையங்களை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும், திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியம் கருதி அவர்லேண்ட் இன்ஞ்ஜினியரிங் பி.லிட்., நிறுவனத்தின் மூலம் தற்போது **123** துப்புரவு பணியாளர்களை **03.12.2020** முதல் **02.12.2021** வரையிலான ஓராண்டு காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் சப்ளை செய்வதற்கும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் **2019-2020** ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி விவரப்பட்டியலில் கண்டுள்ளபடியும், ஏற்கனவே கடந்த ஆண்டு வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் அடிப்படையிலும், மேற்படி நிறுவனத்தின் இசைவின் அடிப்படையிலும், சப்ளை செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.**220.00** லட்சத்திற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியம் கருதியும், இந்நகராட்சி 1 முதல் 6 பிரிவு வரையிலான துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோரின் குறிப்பின் படியும், ஏற்கனவே வெளிக்கொணர்வு முறையில் துப்புரவு பணியாளர்களை சப்ளை செய்து கொண்டிருக்கும் அவர்லேண்ட் இன்ஞ்ஜினியரிங் பி.லிட்., சென்னை நிறுவனத்திற்கு பொது சுகாதாரப்பணியின் அவசரம் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2019-2020ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஊதியத்துடன் கடந்த ஆண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளபடி ESI.EPF 16%+ADMIN CHARGES 1.5%+SAFETY +UNIFORM 6.5%+MATERIALS 8.0% க்கான செலவினத்தொகையும், மேற்படி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அனுமதிக்கலாம்.
4. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2520/2019/எச்1

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்: 23**<br>கோவில்பட்டி நகராட்சியில் ஒப்பந்ததாரர்களிடம் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட GST வரி உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களின் GST எண்களில் File பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட GST வரித் தொகை ஒவ்வொரு பிரதிமாதம் 20-ம் தேதிக்குள் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் GST வரிகள் காலதாமதமாக செலுத்தியதால் வட்டி மற்றும் அபராதத் தொகை ரூ.1,10,000/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் தொகையினை பேங்க் ஆப் இந்தியா வங்கி Online கணக்கு எண்.826510110010105ல் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.864/2020/பி1 | தீர்மானம் எண்.4191<br>அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது |
| | **பொருள் எண்: 24**<br>புரட்சித்தலைவி அம்மா காப்பீடு திட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள (BPL) குடும்ப விபரங்களின் அடிப்படையில் வருவாய் ஈட்டுவோர் (Bread winner) மற்றும் பரிந்துரைக்கப்பட்டவர்கள் (Nominee) பற்றிய புள்ளி விபரங்கள் சேர்ப்பதற்கான முன்பதிவேற்றம் செய்யப்பட்ட (Pre Populated) படிவங்களை TNCDW இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து அச்சடிப்பதற்கு 04.11.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. | தீர்மானம் எண்.4192<br>அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது |

| வ. எண். | விளக்கம் | வெற்றி இன்ஃபோ நெட் சர்வீஸ், 130/2 2-வதுதெரு, மெயின்ரோடு, கோவில்பட்டி. | வினோ இன்ஃபோடெக் 20/2, பாரதிநகர், 3வதுமேட்டுதெரு, கோவில்பட்டி-628501 |
|---|---|---|---|
| | | படிவம் ஒன்றுக்குரிய தொகை | |
| | | Rs. P. | Rs. P. |
| 1. | முன்பதிவேற்றம் செய்யப்பட்ட (Pre Populated) படிவங்களை TNCDW இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து அச்சடிப்பதற்கு | 6.00 | 5.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த வினோ இன்ஃபோடெக் 20/2 பாரதிநகர், 3வது மேட்டுதெரு, கோவில்பட்டி--628 501 விலைப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

(அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) தமிழ்நாடு அரசு காப்பீட்டு திட்டப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த வினோ இன்ஃபோடெக் 20/2, பாரதிநகர், 3-வது மேட்டுதெரு, கோவில்பட்டி–628 501 விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.4078/2020/எச்1

**<u>பொருள் எண்: 25</u>**

**நகர்ப்புற வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் வருவாய் ஈட்டுவோர் (Bread winner) மற்றும் பரிந்துரைக்கப்பட்டவர்கள் (Nominee) பற்றிய புள்ளி விபரங்களை சரிபார்த்தல் மற்றும் புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீடு திட்டத்தில் சேர்க்கும் பொருட்டு TIPPS இணையதளத்தில் மேற்படி புள்ளி விபரங்களை பதிவேற்றம் செய்யும் பணிக்காக 12.11.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.**

| வ. எண். | விளக்கம் | வெற்றி இன்ஃபோ நெட் சர்வீஸ், 130/2 2-வதுதெரு, மெயின்ரோடு, கோவில்பட்டி. | வினோ இன்ஃபோடெக் 20/2, பாரதிநகர், 3வதுமேட்டுதெரு, கோவில்பட்டி-628501 |
|---|---|---|---|
| | | படிவம் ஒன்றுக்குரிய தொகை | |
| | | Rs. P. | Rs. P. |
| 1. | வருவாய் ஈட்டுவோர் (Bread winner) மற்றும் பரிந்துரைக்கப்பட்டவர்கள் (Nominee) பற்றிய புள்ளி விபரங்களை சரிபார்த்தல் மற்றும் புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீடு திட்டத்தில் சேர்க்கும் பொருட்டு TIPPS இணையதளத்தில் மேற்படி புள்ளி விபரங்களை பதிவேற்றம் செய்யும் பணிக்கு. | **12.00** | **10.00** |

**தீர்மானம் எண்.4193**

**அலுவலக குறிப்பு: அனுமதிக் கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த வினோ இன்ஃபோடெக் 20/2 பாரதிநகர், 3வது மேட்டுதெரு, கோவில்பட்டி--628 501 விலைப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :-<br>(அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ஆ) தமிழ்நாடு அரசு காப்பீட்டு திட்டப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த வினோ இன்ஃபோடெக் 20/2, பாரதிநகர், 3-வது மேட்டுதெரு, கோவில்பட்டி–628 501 விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.4078/2020/எச்1 | |
| | பொருள் எண்: 26<br>இந்நகராட்சிக்குட்பட்ட மந்தித்தோப்பு சாலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டு திட்டத்திற்காக பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதிப்பதற்காக தோண்டப்பட்ட பள்ளங்களினால் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதால் சாலையினை Wet Mix Mecadam (WMM) பரத்தி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 5571/2020/இ1 | தீர்மானம் எண்.4194<br>அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

**<u>பொருள் எண்: 27</u>**

**இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக வீடு வீடாகச் சென்று குப்பைகளை சேகரிக்கும் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த 25 மின்கல இயங்கு வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டதால் பெரும்பாலான வாகனங்கள் பழுதுகள் ஏற்பட்டு வாகனங்களை இயக்க முடியாமல் உள்ளது. மேற்படி 25 மின்கல இயங்கு வாகனங்களில் வருடாந்திர பராமரிப்பு பணிகள்** (Annual Maintenance Contract) **மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து 08.09.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.**

| வ. எண் | பணி விபரம் | Priyam Industries and Engineering Private Ltd., No.625, Surya Complex, 2nd Floor, Anna Salai, Chennai--6 | PR&Co., No.1/142, Samundipuram, Gudiyattam – 632 602. | Fountain Trading Company # 77-A, Sudhama Complex, Madurai Road, Trichy-620 008 |
|---|---|---|---|---|
| | | **மின்கல இயங்கு வாகனங்களில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள வாகனம் ஒன்றிற்கு விலைப்புள்ளி** | | |
| | | Rs. P. | Rs. P. | Rs. P. |
| 1. | **மின்கல இயங்கு வாகனங்களில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்வது** | **13,303.00+**GST | **13,550.00+**GST | **13,450.00+**GST |

**வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த** Priyam Industries and Engineering Private Ltd., No.625, Surya Complex, 2nd Floor, Anna Salai, Chennai -- 6 **என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

<u>அலுவலக குறிப்பு</u> ::-

(அ) திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த Priyam Industries and Engineering Private Ltd., No.625, Surya Complex, 2nd Floor, Anna Salai, Chennai --6 விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். **2442/2020/எச்1**

**தீர்மானம் எண்.4195**

**அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது**